**08.06.2026** **CC No. 561/2019** **PW6. டாக்டர். அசீர்**

கடந்த 18.08.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.06/2025 dated 06.10.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

1. நான் Plastic Surgery பிரிவில் சிறப்பு நிபுணர் என்றால், சரிதான். CSI, நெய்யூர் மருத்துவமனையில் Plastic Surgery என்று தனிப்பிரிவு உள்ளது என்றால், பொதுவாக Surgery என பிரிவு உள்ளது. அதில் அனைத்து Surgery–களும் அடங்கும். மேற்படி மருத்துவமனையில் தனித்தனியாக Surgery–க்கான பிரிவுகள் உள்ளது என்றால், நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2. இவ்வழக்கின் புகார்தாரர் கிளாட்சன் என்பவர் நெய்யூர், CSI மருத்துவமனையில் பொறுப்பாளராக இருந்தாரா என்றால், இல்லை. அவர் CSI–யில் வேறு ஏதோ ஒரு பொறுப்பில் இருந்தார். ஆனால் அது எந்த குழு என்பது குறித்து எனக்குத் தெரியாது.

3. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு புகார்தாரர் கிளாட்சன் என்பவருக்கு ஒரு விபத்து ஏற்பட்டது என்றால், சரிதான். மருத்துவ பதிவேடுகளின் அடிப்படையில் எனக்கு அது தெரியவந்தது. அந்த விபத்து சம்மந்தமாக நான் அவருக்கு Plastic Surgery செய்தேன் என்றால், சரிதான்.

4. அந்த Plastic Surgery–க்கு பிறகு அவர் என்னிடம் மருத்துவ பரிசோதனைக்கு தொடர்ச்சியாக வந்துள்ளார் என்றால், 2–3 முறை வந்துள்ளார். நான் நெய்யூர் CSI மருத்துவமனையில் பணிபுரிவதால் எனக்கு திங்கள்சந்தையில் உள்ள மருத்துவமனைகள் குறித்து தெரியுமா என்றால், அனைத்து மருத்துவமனைகளும் எனக்குத் தெரியாது. சாமுவேல் மற்றும் பாரத் மருத்துவமனைகள் உள்ளது எனக்குத் தெரியும்.

5. திங்கள்சந்தையில் சிவா மருத்துவமனை உள்ளது என்றால், சரிதான். நான் புகார்தாரர் கிளாட்சன் என்பவரிடம் வீடு கட்ட வேண்டி டைல்ஸ் வாங்கியுள்ளேனா என்றால், நான் வாங்கியது இல்லை. எனது Contructor வாங்கியிருப்பாரா என்பது குறித்து எனக்குத் தெரியாது.

6. நான் வழங்கிய காயச்சான்றிதழில் டாக்டர். ராஜேஷ் சத்யா என என்பவரின் Letter pad–ல் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவர் நான் பணிபுரியும் மருத்துவமனையில் மருத்துவ மேலதிகாரியாக இருந்து வருகிறார். அதனால் பொதுவாக எங்களது மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்படும் சான்றிதழ்கள் அனைத்தும் அவரது Letter pad–ல் தான் கொடுக்கப்படும்.

7. பொதுவாக மருத்துவ விதிகளின் படி காயச்சான்றிதழ் கொடுக்கும் மருத்துவரின் பெயரில் தான் Letter pad இருக்க வேண்டும் என்றால், சரியல்ல. அந்த மருத்துவமனையின் சார்பாக கொடுக்கப்படும்.

8. நான் வழங்கிய காயச்சான்றிதழில் என்னுடைய பெயர் முத்திரையின் கீழ் நான் எங்கு பணிபுரிகிறேன் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால், காயச்சான்றிதழ் வழங்கப்பட்டது மருத்துவமனையின் பெயரில் உள்ளதால் நான் அங்கு தான் பணிபுரிந்து வருகிறேன். மேலும் மருத்துவமனையின் அலுவலக முத்திரையும் அதில் குறிக்கப்பட்டுள்ளது.

9. நான் காயச்சான்றிதழை 21.01.2013–ம் தேதியன்று வழங்கியுள்ளேன் என்றால், சரிதான். பொதுவாக சிறுகாயங்களுக்கு சிறப்பு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க மாட்டார்கள் என்றால், நோயாளிகளுக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து சேர்க்கப்படுவார்கள்.

10. காயம்பட்ட நபர் கீழே விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால், காயம்பட்ட நபருக்கு இருபக்கங்களிலும் காயங்கள் உள்ளதால் அவர் இருபுறம் விழுந்திருந்தால் அந்த காயங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

11. புகார்தாரர் எனக்கு ஏற்கனவே தெரிந்த நபர் என்பதால் நான் தவறான காயச்சான்றிதழ் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. காயம்பட்ட நபர் எங்களது மருத்துவமனையில் அனுமதிப்பட்டு சிகிச்சை

அளிக்கப்பட்டதற்கு போதுமான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரியல்ல. காயச்சான்றிதழ் கொடுத்துள்ளோம்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 561/2019 P.W.7/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுந்தர்சிங் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்னர் நான் இரணியல் காவல் நிலையத்தில் 2013—ம் வருடம் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்தேன்.

2. கடந்த 06.01.2013—ம் தேதி நான் நிலையப் பொறுப்பில் இருந்த பொழுது நெய்யூர் CSI மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட Intimation அடிப்படையில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கிளாட்சன் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று 11.00 மணிக்கு நிலையம் வந்து புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 07/2013 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் ஹரிகிருஷ்ண பெருமாள்என்பவரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட Intimation கடிதத்தை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். நான் அது போல் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

2. புகார்தாரர் செல்வாக்கு மிக்க நபர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இவ்வழக்கில் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.